குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.69/2021

எ.சா. 2

2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18–ம் தேதி வியாழக் கிழமை எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அய்யப்பன் | தொழில் | |
| தந்தை பெயர் | சதாசிவம் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.33 மணி,

Complainant Sakthivel present. Advocate Mr.P.Kathiravan present for Complainant. Accused Jayaraman Present. Advocate Mr.Thailappan present for Accused.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

1) நான் SBI Bank ஸ்ரீரங்கபாளையம் கிளையில் வங்கி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு வந்த நீதிமன்ற அழைப்பாணையில் உள்ள வரிசை 4ல் உள்ள ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். **அது எ.ம.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனக்கு வந்த நீதிமன்ற அழைப்பாணையில் உள்ள வரிசை 4ல் உள்ள விபரம், புகார்தாரர் இந்த வழக்கு காசோலையை எந்த வங்கியில் வசூலுக்காக 07.01.2021 ம் தேதி செலுத்தினார் என்றால் யூனியன் பேங்க் ஆப் இந்தியா, 5 ரோட்ஸ் கிளை சேலம். எங்களுடைய வங்கிக்கு ஆஜர் எதிரி Stop payment கொடுத்ததின் அடிப்படையில் காசோலை திருப்பப்பட்டது. இவ்வழக்கு காசோலையின் பின்புறம் CTS clearing 07.01.2020, என்ற சீல் மற்றும் 07.01.2021 என்ற சீலும் உள்ளதா என்றால் அது யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கி செய்த பரிவர்த்தனை என்பதால் அதை பற்றி எனக்கு தெரியாது.

2) ஏற்கனவே எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட எதிரியின் மூலம் குறியீடு செய்யப்பட்ட எ.ம.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்பட்ட ஆஜர் எதிரி எனது வங்கியில் Stop Payment செய்ய கொடுத்த மனு ஆகும். தற்போது **அது எ.ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஏற்கனவே எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட எதிரியின் மூலம் குறியீடு செய்யப்பட்ட எ.ம.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்பட்ட ஆஜர் எதிரிக்கு எங்களது வங்கியில் இருந்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கொடுத்த பதிலாகும். தற்போது **அது எ.ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு காசோலை Stop payment செய்யப்பட்ட பதிவேடு அது எ.ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

1) 2018 – 2019 ம் கான வங்கி கணக்கில் ரூ.41,88,298/– ஆஜர் எதிரியின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரி. ஆஜர் எதிரியின் வங்கி கணக்கின் ஆண்டு முடிவில் பரிவர்த்தனை போக மீதம் இருந்த தொகை 31.12.2019 ம் தேதி ரூ.22,284/– ஆகும். 31.12.2019 ம் தேதியில் ஆஜர் எதிரியின் வங்கி கணக்கிற்கு ரூ.22,503/– வரவு வைக்கப்பட்டுள்ளது. அதையும் சேர்த்து தான் மேலே குறிப்பிட்ட தொகை. அதற்கு முன்பாக ஆஜர் எதிரியின் வங்கி கணக்கில் ரூ.126/– மட்டும் தான் இருந்தது.

2) 13.10.2018 ம் தேதி பின்னிட்டு ஆஜர் எதிரியின் வங்கி கணக்கில் பெரிய தொகை எதுவும் பரிவர்த்தனை செய்யபடவில்லை என்றால் அதிபட்ச தொகை ரூ.47,000/– மட்டும் தான். 13.10.2018 ம் தேதிக்கு பின்னிட்டு ஆஜர் எதிரியின் வங்கி கணக்கில் ரூ.50,000/–க்கு உட்பட்ட தொகை தான் நிலுவையில் இருந்தது. 24.09.2018 ம் தேதி ஆஜர் எதிரியின் வங்கி கணக்கில் ரூ.1,72,092/– நிலுவையில் இருந்தது. அன்றைய தேதியில் நிலுவையில் இருந்த தொகையை ஆஜர் எதிரி நினைத்திருந்தால் பரிவர்த்தனை செய்திருக்க முடியும். அன்றைய தேதியில் ரூ.50,000/– மட்டும் தான் பரிவர்த்தனை செய்தார்.

3) எனது வங்கிக்கு ஆஜர் எதிரி Stop Payment கொடுத்த கடிதத்தில் 794476 என்ற காசோலையயும் சேர்த்து பல காசோலைகளை Stop payment செய்ய கூறியிருந்தார். ஆஜர் எதிரி Stop Payment கொடுத்த கடிதத்தில் 794451 என்ற வரிசையில் ஆரம்பிக்கும் பல காசோலைகள் மற்றும் காசோலை புத்தகம் தொலைந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார். ஆஜர் எதிரி Stop Payment கொடுத்த கடிதத்தில் காசோலை புத்தகத்தில் இருக்கும் அனைத்து காசோலைகளும் தொலைந்ததாக சொல்லவில்லை என்றால் சரி. காசோலைகள் மற்றும் காசோலை புத்தகம் தொலைந்துவிட்டதாக பொய்யாக கூட கடிதம் கொடுக்கலாம்.

4) ஆஜர் எதிரி Stop Payment கொடுத்த கடிதத்தில் காவல் துறைக்கு தகவல் தெரிவித்ததாக சொல்லியுள்ளார். மேற்படி காவல் துறையில் தகவல் தெரிவித்ததாக சொல்லியுள்ளதாக முதல் தகவல் அறிக்கை, புகார் மனு ஆகிய எந்த ஆவணமும் கடிதத்துடன் இணைத்து கொடுக்கவில்லை. 01.02.2018 ம் தேதி காசோலை புத்தகம் தொலைந்துவிட்டதாக சொல்லியுள்ளார். ஆஜர் எதிரி Stop Payment கொடுத்த கடிதத்தில் 23.07.2019, மற்றும் 30.09.2019 ஆகிய தேதிகளில் தொலைந்து போனதாக சொல்லப்படும் காசோலைகளுக்கு stop payment கொடுத்துள்ளார். Stop Payment கொடுத்து இருந்தால் அந்த காசோலையை மறுபயனுக்கு பெற்றவருக்கு தெரிய வாய்ப்பில்லை.

5) Stop Payment கடித்தம் கொடுத்த பின்பு கூட மேற்படி காசோலை இன்னோருவருக்கு வழங்கியிருக்க முடியும் என்றால் சரி. பொதுவாக ஒரு காசோலையில் தேதி குறிப்பிட்டு இருந்தால் மட்டும் தான் அதனை வசூலுக்கு

தாக்கல் செய்யமுடியும். தேதி குறிப்பிடாமல் ஒரு காசோலை வசூலுக்கு செலுத்தினால் அந்த காரணத்தினாலேயே வேறு எந்த வகையான பரிசீலனைக்கு உட்படுத்தபடாமல் காசோலை திருப்பப்படும். காசோலையின் பின் பகுதியில் 07.01.2020 என்று இருக்கும் முத்திரை குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு 07.01.2020 ம் தேதியில் காசோலையை வசூலுக்கு செலுத்தும் பட்சத்தில் அந்த காசோலைக்கான காலவரையறை 3 மாதத்தில் முடிவடைந்திருக்கும். அதற்கு பின்னிட்டு அதனை மீண்டும் வசூலுக்கு செலுத்த இயலாது என்றால் சரி.

6) இவ்வழக்கு காசோலை 07.01.2021 ம் தேதி தான் வசூலுக்கு செலுத்தப்பட்டுள்ளதாக எங்களுடைய ஆவணங்களில் உள்ளது. இவ்வழக்கு காசோலை 07.01.2020 ம் தேதி வசூலுக்கு செலுத்தப்பட்டு இருந்தால் 07.01.2021 ம் தேதி செலுத்திய போது அந்த வங்கியிலேயே காலவரையறை முடிவடைந்த நிலையிலேயே திருப்பப்பட்டு இருக்கும் என்றால் சரி. இவ்வழக்கு காசோலை 05.01.2021 என்று தான் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கு காசோலையில் தேதியில் திருத்தம் ஏதாவது காணப்படுகிறதா என்றால் இல்லை. 05.01.2021 என்று இவ்வழக்கு காசோலையில் தேதி குறிப்பிட்டு இருப்பதால் 07.01.2020 ல் வங்கியில் செலுத்தியிருக்க முடியாது.

7) எங்களது வங்கியில் உள்ள ஆவணங்களின் படியும் காசோலையில் உள்ள தேதியின் படியும் வழக்கு காசோலையை 05.01.2021 ம் தேதியிலேயும் அதற்கு பின்னிட்ட காலவரையறைக்கு உட்பட்ட தேதியில் தான் வசூலுக்குதாக்கல் செய்து இருக்க முடியும். 07.01.2020 ம் தேதி இவ்வழக்கு காசோலையை வசூலுக்கு செலுத்தியிருந்தால் எங்களது வங்கி ஆவணத்தில் காணப்பட்டு இருக்கும். அவ்வாறு எந்த ஒரு பதிவும் எங்களது வங்கி ஆவணத்தில் காணப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆஜர் எதிரியின் 01.01.2020 முதல் 31.03.2020 வரையிலான வங்கி கணக்கு பட்டியல். **அது ம.சா.ஆ– 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8) ம.சா.ஆ–5 ஆவணத்தின் படி 06.03.2020 ம் தேதியில் ஆஜர் எதிரியின் வங்கி கணக்கில் ரூ.75/– மட்டும் தான் இருக்கிறது என்றால் சரி. எங்களுடைய வங்கி ஆவணங்களின் படி வழக்கு காசோலையானது 07.01.2021 ம் தேதியில் ஒரே ஒரு முறை மட்டும் தான் வசூலுக்காக செலுத்தப்பட்டது.

**மறுவிசாரணை :** இல்லை.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 04.32 மணி.

Sd/S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.